*கவனிக்க.- 2023.01.20 ஆந் திகதிய 2316 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி* I *: தொகுதி* III *மற்றும் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2317 - 2023 ජනවාරි මස 27 වැනි සිකුරාදා - 2023.01.27

*2317 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 176 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2023, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


175 - B82423 - 5403 (2023/01)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**நாத்தண்டிய பிரதேச சபை**

*களியாட்ட வரி விதித்தல் - 2023*

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட களியாட்ட நடவடிக்கைக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்திலிருந்து 10% களியாட்ட வரியினை விதித்து அறவிடுவதற்கு 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிகட்டளைச் சட்டத்தில் 2 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கு அமைய நாத்தண்டிய பிரதேச சபையினால் 2022.09.08 ஆந் திகதி பொதுச் சபையின் தீர்மான இலக்கம் 5-II கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையினை, வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அட்மிரால் ஒஃப் தஃபிலீட் வசந்த கரன்னாகொட ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (இடைநேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அங்கீகரிக்கப்பட்டது தொடர்பாக அறிவித்தல் விடுக்கின்றேன்.*

வசந்த கரண்னாகொட,
வடமேல் மாகாண ஆளுநர்.

வடமேல் மாகாண ஆளுநரது அலுவலகம்,
2022, நவம்பர் 30.

**தீர்மானம்**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நாத்தண்டிய பிரதேச சபையின் நிர்வாக எல்லையினுள்ளான பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற, உரிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு களியாட்ட நடவடிக்கைக்கு உள்வாங்குவதற்காக செய்யப்படும் செலுத்துகையினால் நூற்றுக்கு பத்து 10% இற்கு சமமான வரியினை விதித்து அறவிட வேண்டும் என்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் விதிகளின்படி கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்தின் கீழ் வர்த்தமானியில் பிரகரிப்பதற்கும், முன் கூறிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாதத்திற்கு அடுத்த மாதத்தின்முதல் நாளிலிருந்து இது நடைமுறைக்கு வர வேண்டும் என்றும் பொதுச் சபை தீர்மானிக்கின்றது.*

01-249

---

**நீர்கொழும்பு மாநகர சபை**

*துணை வரவு செலவு ஆவணம் இல. 01 - 2023*

*நீர்கொழும்பு மாநகர சபையில் 07.02.2023 இல் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் முன்வைப்பதற்காக 2023 ஆம் வருடத்தின் திட்டமிட்ட துணை வரவு செலவு திட்டம் 31.01.2023 இல் இருந்து 07 தினங்கள் பொது மக்கள் பார்வையிடுவதற்காக மாநகர சபை கணக்காளர் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்பதை 252 ஆம் அதிகார மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 214 (ஆ) வின் கீழ் அறியத் தருகின்றேன்.*

டப். எம். தயான் லான்சா,
மாநகர முதல்வர்,

மாநகர சபை,
நீர்கொழும்பு.

01-312

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.